# மோட்டார் சைக்கிளோட்டியின் கழுத்தைப் பதம்பார்த்த பட்டத்தின் கயிறு

# கண்காணிப்புப்பணி தீவிரம்



கோலாலம்பூர், ஜூலை 23- சில தினங்களுக்கு முன்பு தாமான் மெட்ரோ பொலிட்டன் கெப்போங்கில் ஒரு பட்டத்தின் கயிறு காரணமாக மோட்டார் சைக்கிளோட்டி ஒருவர் காயமடைந் திருக்கிறார். இதனையடுத்து கோலாலம்பூர் மாநகர் மன்றம் அந்தப் பகுதியில் கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தி இருக்கிறது என டிபிகேஎல் எனப்படும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அறிக்கை கூறியது.பட்டத்தின் கயிறு காரணமாக மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்திருப்பதைக் கடுமையாகக் கருதுகிறோம். ஆகவே போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி அருகே மனமகிழ் பூங்காவிலும் மற்ற பகுதிகளிலும் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அறிக்கை தெரிவித்தது.

சம்பந்தப்பட்ட அந்தப் பகுதியில் பாதுகாப்பு எச்சரிக்கைப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. சாலையைப் பயன்படுத்துவோர் கவனமுடன் இருக்க வேண்டும் என அதில் நினைவுறுத்தப்பட்டிருக்கிறது. பொதுமக்களும் இதுபோன்ற பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பாதுகாப்பு வழிகாட்டிகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். பட்டங்களைப பறக்க விடுவது போன்ற பொழுதுபோக்குகளில் ஈடுபடுவோர் வழிகாட்டிகளை எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும்..

குறிப்பாக சாலையோரம் அல்லது போக்குவரத்து அதிகம் உள்ள பாதைகள் அருகே மிகக் கவனமுடன் இந்தப் பொழுதுபோக்கில் ஈடுபட வேண்டும் என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது. சில தினங்களுக்கு முன்பு  ஒரு பட்டத்தின் கயிறு குறுக்கே பறந்ததால் மோட்டார் சைக்கிளோட்டி ஒருவர் காயமடைந்தார்.

தாமான் தாசேக் மெட்ரோ பொலிட்டன் அருகே எம்ஆர்ஆர் 2 சாலையின் மையப் பகுதியில் அந்தப் பட்டத்தின் கயிறு குறுக்கே பறந்து வந்திருக்கிறது. 27 வயதுடைய மோட்டார் சைக்கிளோட்டி பத்துகேவ்ஸ் பகுதியில் இருந்து ஸ்ரீடாமன்சாரா நோக்கி மாலை 6.00 மணிக்குச் சென்றபோது பட்டத்தின் கயிறு அவருடைய கழுத்தில் காயத்தை விளைவித்திருக்கிறது என்று கோலாலம்பூர் போக்குவரத்துப் புலனாய்வு அமலாக்கத்துறைத் தலைவர் ஏசிபி முகமட் ஸம்ஸுரி முகமட் இசா குறிப்பிட்டுள்ளார்.